DINAKARAN 02 JAN 2008

# ஈஷா சுகாதார விழிப்புணர்வு திட்டம் துவக்கம்

**கோவை, ஜன.2:** கோவை ஈஷா அறக்கட்டளை தனது கிராம புத்துணர்வு இயக்கத்தின் கீழ் சுகாதார விழிப்புணர்வு பிரச்சாரம் என்ற புதிய திட்டத்தை துவக்கியுள்ளது.

வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் உள்ள ஈஷா யோகா மையத்தில் இத்திட்டத்தை இதன் நிறுவனர் சத்குருஜக்கி வாசுதேவ் துவக்கி வைத்தார். பின்பு அவர் பேசியதாவது:

இந்த பிரச்சார திட்டம் 3 நிலைகளில் நடைபெறும். நோய்த்தடுப்பு, தொற்று நோய்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல், நோய் மற்றும் சிகிச்சை பற்றிய கல்வியறிவு ஆகியவற்றின் மூலம் கிராம மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கம்.

இந்த புதிய திட்டம் சிறிய அளவில் தான் துவங்கப்பட்டுள்ளது. சுகாதார விழிப்புணர்வை பரப்புவதில் மக்கள் தகுந்த ஆதரவு வழங்க வேண்டும்.

ஒவ்வொரு தனி நபரும் சுகாதாரம், நோய், நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சை ஆகியவற்றை பற்றிய விழிப்புணர்வை தங்கள் குடும்பத்திலும், நண்பர்கள் இடையிலும் பரப்பி நோயற்ற சமூகத்தை உருவாக்க தகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.



கோவை ஈஷா அறக்கட்டளை சார்பில் கிராம புத்துணர்வு இயக்கத்தின் கீழ் சுகாதார விழிப்புணர்வு பிரசார திட்டத்தை வெள்ளியங்கிரி மலையடிவாரத்தில் உள்ள ஈஷா யோக மையத்தில் இதன் நிறுவனர் சத்குரு ஜகிவாசுதேவ் துவக்கி வைத்தார்

தங்கள் கிராமப்புத்துணர்வு திட்டத்தின் கீழ் இயங்கி வரும் நடமாடும் இலவச மருத்துவ ஊர்திகள் சென்று வரும் ஆயிரத்து 80 கிராமங்களில் இத்திட்டத்தை ஆரம்பித்து பின்னர் தமிழக அளவில் மற்ற கிராமங்களுக்கு விஸ்தரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

2008ம் ஆண்டில் மொத்தம் 576 கிராமங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

பொது சுகாதார விழிப்புணர்வின் கீழ், தொற்று நோயை தடுக்கும் முயற்சியாக தூய்மை மற்றும் சுகாதாரமாக வாழும் வழிகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், கிராம மக்கள் இடையில் சாதாரணமாக காணப்படும் ரத்த சோகை மற்றும் சத்து பற்றாக்குறைகளை எதிர்கொள்ளும் வழிகளும் பிரச்சாரம் செய்யப்பட உள்ளது.

நீரிழிவு மற்றும் ரத்த அழுத்தம் போன்ற நோய்களை குறித்த விழிப்புணர்வு, நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை ஆகியவையும் இத்திட்டத்தின் கீழ் நடைபெறும். மேலும், எச்ஐவி, எலும்புருக்கி நோய், கண் மற்றும் பல் பாதுகாப்பு ஆகியவை குறித்த சிறப்பு பிரச்சாரங்கள் பெரிய மருத்துவமனைகள் மற்றும் அரசு நிறுவனங்களுடன் நடத்தப்படும். தெரு நாடகங்கள், ஒலி மற்றும் ஒளி காட்சிகள் மற்றும் வரைபடங் கள் மூலம் விழிப்புணர்வு உருவாக்கப்பட உள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதன் முதலாக செம்மேடு கிராமத்தில் நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்தப்பட்டது.

இவ்வாறு சத்குரு பேசினார்.